# அலகு 10: கொள்வனவு நாட்குறிப்பு

கடனுக்கு கொள்வனவு செய்யும் மீள் விற்பனைப் பொருள்களை முதலில் பதிவு செய்யும் ஏடே கொள்வனவு **"நாட்குறிப்பு"** எனப்படும்.

உ+ம் ஆடைகளை கொள்வனவு செய்து மீள் விற்பனை செய்யும் வணிகமொன்று கடனுக்கு கொள்வனவு செய்த ஆடைகளை கொள்வனவு நாட்குறிப்பில் பதிவிடும்.

- **வழங்குனர்கள்/வியாபாரக் கடன் கொடுத்தோர்** :கடனுக்கு பொருள்களை கொள்வனவு செய்யும்போது பொருள்களை கடனுக்கு வழங்கும் பிரிவினர்
- **மூல ஆவணம்** :கொள்வனவுப் பட்டியல்

ஆகவே கடனுக்கு கொள்வனவு செய்யப்பட பொருட்கள் முதலில் கொள்வனவு நாட்குறிப்பில் பதியப்படும் பின்னர் குறிப்பிட்ட காலத்தில் பேரேட்டிற்கு மாற்றப்படும்.

**பயிற்சி 1**

பழங்களை கொள்வனவு செய்து மீள் விற்பனை செய்யும் நிறுவனமான சதுன் வணிகத்தின் 2020 ஏப்ரல் மாதத்தில் இடம் பெற்ற தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல | வழங்குனர்கள் | ஏனைய விபரங்கள் |
|---|---|---|---|
| 2020/04/01 | 110 | நிஷாந்தன் | 1kg ரூபா 135 வீதம் 15kg ஆப்பிள் பழங்கள் |
| 2020/04/04 | 115 | அமலன் | 1kg ரூபா 200 வீதம் 8kg கொய்யப்பழங்கள் |
| 2020/04/15 | 122 | அணில்அங | 1kg ரூபா 315 வீதம் 5kg அன்னாசிப்பழங்கள் |
| 2020/04/22 | 138 | பிரியங்கா | 1kg ரூபா 140 வீதம் 12kg தோடம்பழங்கள் |
| 2020/04/26 | 140 | ராகேஷ் | 1kg ரூபா 86 வீதம் 10kg மாம்பழங்கள் |

தேவை: வணிகத்தின் 2020.04.30 ஆம் திகதி வணிகத்தின் கொள்வனவு நாட்குறிப்பை தயாரித்து பேரேட்டிற்கு மாற்றுக.

**பயிற்சி 2**:

கஜன் வணிகத்தின் 2020 ஜூன் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1) 2020.06.01 பட்டியல் இலக்கம் 65 இன் அடிப்படையில் ரமேஷிடம் கொள்வனவு செய்யப்பட்ட அச்சிடல் கடதாசி ஒன்று ரூ.150 வீதம் 30. (வியாபாரக் கழிவு 10%)
2) 2020.06.05 பட்டியல் இலக்கம் 73 இன் அடிப்படையில் பிரபாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட அடிமட்டம் ஒன்று ரூ.15 வீதம் 40.

3) 2020.06.10 பட்டியல் இலக்கம் 98 இன் அடிப்படையில் ரங்காவிடம் கொள்வனவு செய்யப்பட்ட நிழற் பிரதிக்கடதாசி ஒன்று ரூ.200 வீதம் 50. (வியாபாரக் கழிவு 5%)

4) 2020.06.14 பட்டியல் இலக்கம் 102 இன் அடிப்படையில் லதாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட A4 கடதாசிப் பொதி ஒன்று ரூ.220 வீதம் 60. (வியாபாரக் கழிவு 10%)

5) 2020.06.23 பட்டியல் இலக்கம் 112 இன் அடிப்படையில் சுவர்ணாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட கணிப்பான் ஒன்று ரூ.450 வீதம் 25.

கஜன் வணிகத்தினல் இடம் பெற்ற கொள்வனவுகளை கொள்வனவு நாட்குறிப்பில் பதிவு செய்து 2020 ஜூன்.30 க்கு உரிய பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுக.

பாடப்புத்தகத்தில் உள்ள செயற்பாடு 01 மற்றும் 02 ஐ செய்க (பக்கம் 157)